Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    PEOPLES DAILY    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    புரட்டாதி 08    (24-09-1991)    செவ்வாய்க்கிழமை    ஓசை: 218

## ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. இவ் வெற்றிடங்கள் தற்காலிக, மணித்தியால அடிப்படையில் பணிபுரியக் கூடிய ஆசிரியர்களை நியமிப்பதன் மூலம் நிரப்பப்படவிருக்கின்றன. அரச திணைக்களங்களில் இருந்து ஓய்வு பெற்ற ஆங்கிலம் கற்பிக்கக் கூடியவர்களிடமிருந்தும், ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்களிடமிருந்தும் ஆங்கிலம் கற்பிக்கக் கூடிய ஏனையோரிடம் இருந்தும் கிளிநொச்சிக் கல்வித் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. இதுதொடர்பான மேலதிக விபரங்களை கோத்தணி அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

# கொழும்பில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடு

# பணியில் சிறப்புக் காவற்படைப் பிரிவு

## தகாவிற்கு கலரியிலும் இடமில்லை

இன்றைய பாராளுமன்றத்தின் கூட்டத்தொடரில் பார்வையாளராகக் கலந்துகொள்ளப் பாராளுமன்ற கலரியில் அனுமதி கோரியிருந்த சிரேஷ்ட அரசியல்வாதியும், முன்னாள் காலி தொகுதி எம். பி.யுமான டபிள்யூ. தகநாயக்காவுக்கு அத்தகைய அனுமதி மறுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. திரு. தகநாயக்கா குறுகியகாலம் சிறி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத்திலும் குழப்பம் ஏற்படலாம்

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடரின் முதலாவது கூட்டம் இன்று ஆரம்பமாகவுள்ள வேளையில் பாராளுமன்றத்திற்கு உள்ளும, தென்னிலங்கையின் ஏனைய பகுதிகளிலும் குழப்பங்களும், வன்முறையும் வெடிக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா உரை நிகழ்த்தவுள்ளார்.

ஜனாதிபதி அரசியல்யாப்பை மீறி நடந்துள்ளார் என்று குற்ற மனுத்தாக்கல் செய்திருக்கும் அதிருப்தியாளர்களும், எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியைப் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்த விடாத முயற்சியில் ஈடுபடக் கூடும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தங்களைப் பாராளுமன்ற வளாகத்தினுள் நுழைய விடாமல் தடுத்து வைக்கும் நோக்கத்துடன் தங்களை வெளியில் வைத்து உடல் ரீதியாகத் தாக்கக்கூடு

(4ஆம் பக்கம் பார்க்க)

## பாராளு. கௌரவத்தை எம்: பிக்கள் பேணவும்

-வின்சன்ட் பெரேரா

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடர் இன்று கூடும் போதும், அதன் பின் ஒவ்வொரு அமர்வுத் தினங்களிலும் பாராளுமன்றத்தின் கௌரவத்தையும், கீர்த்தியையும் பேணுவதற்கு அரசாங்க எம். பி.க்கள் சகல முயற்சியையும் எடுக்கவேண்டுமென்று பிரதம 'குறடா' வின்சன்ட் பெரேரா கேட்டுள்ளார்.

பாராளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சர் வின்சன்ட் பெரேரா அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி

## சிங்கள மக்களுக்கு புலிகளின் பகிரங்கக் கடிதம்

(லண்டன்)

சிங்கள மக்களுக்கு விடுதலைப் புலிகள் பகிரங்க கடிதம் ஒன்றை விட்டிருப்பதாக நேற்று பி.பி.சி. தெரிவித்தது. தங்கள் போராட்டம் சாதாரண சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல என்றும், இலங்கை அரசின் கொடுங்கோன்மைக்கு எதிரானது என்றும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றத் திட்டங்கள் போர்முனை எல்லைகளில் ஒரு மனித கவசமாக வலிந்து புகுத்தப்பட்டுள்ளது என்றும் இந்த குடியேற்ற வாசிகளுக்கு இலங்கை அரசு ஆதரவு வழங்கி இருப்பதாகவும் இவர்களே அடிக்கடி புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி வருவதாகவும் அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாக பி. பி. சி. நேற்றிரவு தெரிவித்தது.

## பெரும்பான்மையை தீர்மானிப்பதில் வடபகுதி பாராளு. ஆசனங்கள்

### ஐலண்ட் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

அரசியல் நெருக்கடி அதிகரித்துவரும் இன்றைய நிலையில் பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அல்லது எதிர்க்கட்சிகள் மற்றும் அதிருப்தியாளர் கூட்டு அதிக பலத்தை பெறப்போகின்றதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பது புலிகள் தலைவர் பிரபாகரனின் கையிலுள்ளது என்று கடந்த ஞாயிறு ஐலண்ட் இதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் குறைந்த பட்சம் பெரும்பான்மையைப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பெரும்பான்மை இழப்பின் பிரதமராக அநுரா

- பிரேமதாசா

(கொழும்பு)

ஐ. தே. கட்சி அரசாங்கம் பாராளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை நிரூபிக்கத் தவறினால் சிறிலங்காவின் பிரதமர் பதவியை அநுரா பண்டாரநாயக்காவிற்கு வழங்கவுள்ளேன் என்று சிறிலங்காவின் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மை பலத்தை அரசாங்கம் இழந்தால், பிரி

(4ஆம் பக்கம் பார்க்க)

## மூளாய், பொன்னாலைமீது எறிகணைத் தாக்குதல்

(பொன்னாலை)

சிறிலங்கா இராணுவத்தினர் காரைநகரில் இருந்து பொதுமக்களின் குடியிருப்புக்களை நோக்கி எறிகணைத் தாக்குதல் நடாத்துவது வழமையாகிவிட்டது.

காரைநகரில் உள்ள வலந்தலைச் சந்தியில் இருந்து கடந்த சில நாட்களாக மூளாய், பொன்னாலை ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்களின் குடியிருப்புக்களை நோக்கி இரவு நேரங்களில் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல் நடாத்தி வருகின்றனர்.

இத்தாக்குதல்களினால் மேற்படி பகுதிகளில் இருந்து பெரும்பாலான மக்கள் இரவு நேரங்களில் இடம்பெயர்ந்து செல்வதும் வழமையாகி விட்டது.

(க)

குற்ற மனுத்தாக்கல் செய்தி ருக்கும் அதிருப்தியாளர்களும், ஐக்கிய தேசியக் கட்சி தரப் பில் தெரிவிக்கப்படுகிறது. உடல் ரீதியாகத் தாக்கக் கூடு

(4ஆம் பக்கம் பார்க்க)

# பெரும்பான்மையை தீர்மானிப்பதில் வடபகுதி பாராளு. ஆசனங்கள்

### ஐலண்ட் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

அரசியல் நெருக்கடி அதி கரித்துவரும் இன்றைய நிலை யில் பாராளுமன்றத்தில் ஐக் கிய தேசியக் கட்சி அல்லது எதிர்க்கட்சிகள் மற்றும் அதிருப்தியாளர் கூட்டு அதிக பலத்தைப் பெறப்போகின்றதா இல்லையா என்பதைத் தீர் மானிப்பது புலிகள் தலைவர் பிரபாகரனின் கையிலுள்ளது என்று நேற்று ஞாயிறு ஐலண்ட் இதழில் குறிப்பிடப்பட்டுள் ளது.

பாராளுமன்றத்தில் குறைந்த பட்சம் பெரும்பான்மையைப்

(4ஆம் பக்கம் பார்க்க)

# முடிவு எடுக்கும் உரிமையை இராணுவத்திடம் விடவேண்டும்

### சிறிலங்கா பதுகாப்பு அமைச்சு

(கொழும்பு)

யுத்தமொன்று நடைபெறும் போது நிலவும் சூழலுக்கு ஏற்ப கையாள வேண்டிய போர்த்திறன்கள் பற்றியும், உபாயங்கள் பற்றியும் முடி வெடுக்கும் உரிமை இராணு வத்தினருக்கே விடப்படல் வேண்டுமென பாதுகாப்பு அமைச்சு நேற்று கொழும்பில் விடுத்த அறிக்கை ஒன்றில் வற்புறுத்திக் கூறியுள்ளது.

பாதுகாப்பு படையினர் பற்றி

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஊர்காவற்றுறை கடற் போரில் கடற்படைத் தளபதி படுகாயம்

(கொழும்பு)

ஊர்காவற்றுறை கடற்பரப் பில் நேற்று முன்தினம் புலி களுடன் ஏற்பட்ட கடற் போரில் சிறிலங்கா கடற்படை யினர் ரோந்துசென்ற பெரிய கடற்படைப்படகொன்று மூழ் கடிக்கப்பட்டதாகவும், அதில் சென்ற 9 கடற்படையினரில் 7 பேர் கொல்லப்பட்டதாகவும், ஒருவர் படுகாயத்துடன் மீட் கப்பட்டதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சி

(4ஆம் பக்கம் பார்க்க)

ஐக்கிய தேசியக் கட்சி

# பெரும்பான்மை இழப்பின் பிரதமராக அநுரா

### - பிரேமதாசா

(கொழும்பு)

ஐ.தே. கட்சி அரசாங்கம் பாராளுமன்றத்தில் தனது பெரும்பான்மையை நிரூபிக் கத் தவறினால் சிறிலங்கா வின் பிரதமர் பதவியை அநுரா பண்டாரநாயக்காவி ற்கு வழங்குவேன் என்று சிறிலங்காவின் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித் துள்ளார்.

பெரும்பான்மை பலத்தை அரசாங்கம் இழந்தால், பிரி

(4ஆம் பக்கம் பார்க்க)

# அதிருப்தியாளருக்காக நான் பதவி விலகமுடியாது

### -பிரேமதாசா

(கொழும்பு)

அதிருப்தியாளர் கோரி வரு வதைப்போல் தான் பதவியிலி ருந்து விலக முடியாது என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

நான் மனச்சாட்சிப்படி நடப்பவன். என்னைத் தேர்ந் தெடுத்த அப்பாவி மக்களை என்னால் ஏமாற்ற முடியாது என்றும் ஜனாதிபதி கூறியிருக் கிறார்.

# சமாதான முயற்சியை நிராகரித்துவிட்டேன்

### - ஜனாதிபதி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தியாளர்கள் மேற் கொண்ட சமாதான முயற்சி ஒன்றினை நிராகரித்து விட்டதாக சிறிலங்கா ஜனாதி பதி ஆர். பிரேமதாசா தெரி வித்துள்ளார்.

சமாதான முயற்சியில் சிறு கட்சிகளுக்கு இடமில்லை என்றும், இத்தகையநடவடிக் கைகள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சிறிய கட்சி களுக்கு எதிரான சதியென் றும் பிரேமதாசா தெரிவித் தார்.

தமிழ் பிரதேசங்களில் சில ... தது.

# மூளாய், பொன்னாலைமீது எறிகணைத் தாக்குதல்

(பொன்னாலை)

சிறிலங்கா இராணுவத்தி னர் காரைநகரில் இருந்து பொதுமக்களின் குடியிருப்புக் களை நோக்கி எறிகணைத் தாக்குதல் நடாத்துவது வழ மையாகிவிட்டது.

காரைநகரில் உள்ள வலந் தலைச் சந்தியில் இருந்து கடந்த சில நாட்களாக மூளாய், பொன்னாலை ஆகிய பகுதி களில் உள்ள பொதுமக்களின் குடியிருப்புக்களை நோக்கி இரவு நேரங்களில் தொடர்ச் சியான எறிகணைத் தாக்கு தல் நடாத்தி வருகின்றனர்.

இத்தாக்குதல்களினால் மேற்படி பகுதிகளில் இருந்து பெரும்பாலான மக்கள் இரவு நேரங்களில் இடம்பெயர்ந்து செல்வதும் வழமையாகி விட் டது. (க)

# இந்திய மீனவர்கள் 24 பேரைக் காணவில்லை

(சென்னை)

இராமேஸ்வரம்கடற்கரைப் பகுதியிலிருந்து இம்மாதம் 19 ஆம் திகதி கடலுக்குச் சென்ற 24 மீனவர்களைக் காணவில்லை என்று தமிழக முதலமைச்சர் செல்வி. ஜெய லலிதா கூறியுள்ளார்.

நேற்று சட்டப் பேரவையில் வெளியிட்டுள்ள அறிக்கை யொன்றில் காணாமல் போன மீனவர்களை தேடுவ தற்கு கடற்படை ஹெலி கொப்டர்களின் உதவி கோரப் பட்டுள்ளதாகவும்,

அவர்களை தேடிக் கண்டு பிடிக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறுராமநாத புர மாவட்ட ஆட்சித் தலைவ

(4ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் குழுக்களுக்கு அரசு ஆயுத விநியோகம்

### - பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

விடுதலைப் புலிகளுக்கெதி ராக சிறிலங்காப் படைகளுக்கு உதவும் ஈ.பி.டி.பி, ஈ.என்.டி எல்.எவ், புளொட் ஆகிய குழுக்களுக்கு இப்பொழுது ஆயுத உதவி வழங்கி இருப்ப தாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு ஆயு தம் வழங்கிய விவகாரம் தொடர்பாக கொழும்பு பத்தி ரிகைகளில் வெளிவந்த செய்தி களுக்கு விளக்கமளித்துவிடுத்த அறிக்கையிலேயே இந்த விப ரத்தையும் சிறிலங்கா பாது காப்பு அமைச்சு தெரிவித் துள்ளது.

# மணலாற்றில் உக்கிர மோதல் தொடர்கிறது

## 9 படை பலி; 3 அதிகாரி உட்பட 28 பேர் படுகாயம்

(கொழும்பு)

மணலாற்றுக் காட்டுப்பகுதி யில் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற் கும் இடையில் கடும்மோதல் கள் தொடர்வதாக சிறி லங்கா பாதுகாப்புவட்டா ரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக் கின்றன.

இராணுவத்தினரை எதிர்த் துப் புலிகள் கடும் போர் புரிவ தாகவும் நேற்று முன்தின மோதலில் மட்டும் ஒன்பது இராணுவத்தினர் கொல்லப் பட்டதாகவும், மூன்று அதிகா ரிகள் உட்பட 28 பேர் படுகா யம் அடைந்ததாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக் கின்றன.

அதேவேளை, மணலாற்றுப் பகுதியில் தொடர்ந்து பெரும் எடுப்பிலான குண்டு வீச்சு தாக்குதல்கள் இடம் பெறுவ தாகவும், இரவு பகலாக குண்டு வீச்சில் ஈடுபடும் விமா னங்களின்இரைச்சல்வவுனியா விலும், அனுராதபுரத்திலும் பெரியளவில்ஒலித்த வண்ணம்

(4ஆம் பக்கம் பார்க்க)

''மக்கள் புரட்சி இங்கு வெடிக்கட் டும். அது நிச்சயமாக தமிழீழத்தை எனது இறப்பின் மூலம் பெற்றுத்தரும். இதனை வானத்திலிருந்து இறந்த ஏனைய போரா ளிகளுடன் சேர்ந்து நானும் பார்த்து மகிழ்வேன்''.

— திலீபன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

## பட்டப்படிப்புகள் கல்லூரி
## மாணவர்களுக்கான அறிவித்தல்

எமது கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவரும் இன்று காலை, (24-9-91) 10 மணிக்கு சந்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இயக்குநர்
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

(B/3174)

## இடம்மாற்றம்

தமிழகத்தின் கரையோரத்தில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து அகதி முகாம்களும் இந்த வாரத்திற்குள் இடம்மாற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் மண்டபம் அகதி முகாம் மட்டும் பழையபடி அந்த இடத்திலேயே இயங்கும் என்று தமிழக உயர் அதிகாரிகள் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

# தியாகி திலீபன் நினைவு தின
# எழுச்சி விழா

இடம்:- யாழ். இந்துக்கல்லூரி
குமாரசுவாமி மண்டபம்
காலம்:- 25-09-91 புதன்கிழமை
காலை 8-30 — 12-30 மணி வரை
பிற்பகல் 2-00 — 6-30 மணி வரை

**காலை நிகழ்ச்சிகள்**

1. தலைமையுரை
   அதிபர் உரை
   வரவேற்புரை
   ஆசியுரை
   நினைவுரை
   சிறப்பு விருந்தினர் உரை
   பிரதம விருந்தினர் உரை
2. உருவப்படம் திரைநீக்கம்
3. கவியரங்கம
   "நாளை விடியும்
   நம் துயரம் முடியும்"
4. நாடகம்
   "சத்திய சோதனை"

**மாலை நிகழ்ச்சிகள்**

1. தலைமையுரை
   வரவேற்புரை
   அஞ்சலியுரை
   பிரதம விருந்தினர் உரை
2. பட்டி மன்றம்
   "திலீபன் நினைத்தது போல் அவரது தியாக மரணத்தின் பின்னர் மக்கள் புரட்சி வெடித்ததா? இல்லையா"
3. வில்லிசை
   "தியாகப் பயணத்தில்
   திலீபனுடன் பன்னிருநாட்கள்"
4. புரட்சி கானங்கள்
5. நன்றியுரை

அனைத்துத் தமிழீழ மக்களையும் பே ராளிகளையும் புரட்சிக் கரங்கூப்பி அழைக்கின்றோம்.

இட ஒதுக்கீடு:- எழிலகம் — யாழ் இந்து மாணவர்கள்

(B/3173)

## 67ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்



வீர ஜனனம் 22 — 12 — 1974

வீர மரணம் 22 — 07 — 1991

### வீரவேங்கை லோலோ
### (தில்லைநாதன் முரளீதரன்)

22 - 07 - 1991 அன்று புல்லாவெளியில் நேரடி மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை லோலோவின் (தில்லைநாதன் முரளீதரன்) அந்தியேட்டிக் கிரியைகள் 25-9-91 புதன்கிழமை ஏழாலையில் அவரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள், சகபோராளிகள், இயக்க உறுப்பினர்கள், அனைவரையும் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

ஏழாலை இழக்கு ஏழாலை — தில்லைநாதன் குடும்பத்தினர்

(R/1776)

### கருங்கல்லில் பெயர் பொறிக்கக் கூடிய
## தொழிலாளர் தேவை

ஒப்பந்த அடிப்படையிலோ, அல்லது நாட் கூலியாகவோ கருங்கல்லை, சீர்செய்து பெயர் பொறிக்கக் கூடிய தொழிலாளர் உடன் தேவைப்படுகின்றனர்.

தொடர்பு கொள்க:
விடுதலைப்புலிகள்,
கலை, பண்பாட்டுக் கழகம்
தலைமைச்செயலகம்
கோண்டாவில்.

B/3173

## வரி விளம்பரம்

**தேவை**

சக்ஸ்பீரே, ஹைலாண்ட் மற்றும் யகிஸாவெற்று சயப் பைகள் நல்ல நிலைமையில் சேர்ப்பித்து பை ஒன்றுக்கு -/10 சதம் வீதம் பெற்றுக் கொள்ளுங்கள். மீக்கிவைற், யாழ்ப்பாணம். (B/3157)

**நாடகங்கள்**

ஆசிரியர் இலகுவாக நடிக்கக் கூடிய பல நாடகங்களைக் கொண்ட நூல்கள் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய கெட்டிக்காரர்கள் 25/- முருகாம்பிள்ளை 60/- நகைச் சுவை நிறைந்த 19 நாடகங்கள். பூபாலசிங்கம், சிறீலங்கா தமிழருவி புத்தகசாலைகள்.

(R-1774)

### சிறிய நாடுகள் தம்மை பாதுகாக்க
# நாடாளுமன்ற முறையை பலப்படுத்த வேண்டும்
### -- சங்கர் தயாள்சர்மா

(புதுடில்லி)
சிறிய நாடுகள் தங்களது தேசிய ஒற்றுமைக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களைப் பயனுள்ள வகையில் களைவதற்கு தங்களது பாராளுமன்ற முறையை வலுப்படுத்த வேண்டியது அவசியம் என்று இந்திய உப ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மா வலியுறுத்தினார். கடந்த சனிக்கிழமை புதுடில்லியில் கூட்டப்பட்டுள்ள சிறிய நாடுகளின் உறுப்பினர்களின் பதினோராவது பாராளுமன்ற மாநாட்டை தொடக்கி வைத்துப் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில்,

மக்களது தேவைகளை நிவர்த்திக்காத எந்தவொரு அரசியல் முறையும் நிலையாக இருக்காது என்றும், பொருளாதார சமச்சீரற்ற நிலையும், போதியவளர்ச்சியற்ற நிலையுமே ஒரு ஜனநாயக அமைப்புக்குள்ள பிரதான பிரச்சினை என்றும் தெரிவித்தார்.

## இலங்கை
## செஞ்சிலுவைச் சங்கம்
## கிளிநொச்சி

எங்கள் நிறுவனத்தின் வருடாந்தப்பொதுக் கூட்டம் 28.09.91 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகின்றோம்.

விபரங்கள் அங்கத்தவர்களுக்கு தனித்தனியே அறிவிக்கப்படும்.

21.9 91 — சு. சிவராஜலிங்கம்
செயலாளர்

(R/1775)

# போர் முனை - உணவு உற்பத்தி

## தமிழீழ மக்களே!

புரட்சிக் கரங்கூப்பி அழைக்கின்றோம்.

இட ஒதுக்கீடு:- எழிலகம் -- யாழ் இந்து மாணவர்கள்

(B/3178

கலை, பண்பாட்டுக் கழகம்

தலைமைச்செயலகம்

கோண்டாவில்.

B/3178

எங்கள் நிறுவனத்தின் வருடாந்தப்பொதுக் கூட்டம் 28.09.91 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகின்றோம்.

விபரங்கள் அங்கத்தவர்களுக்கு தனித்தனியே அறிவிக்கப்படும்.

21.9 91 சு. சிவராஜலிங்கம்

(R/1775) செயலாளர்

# போர் முனை - உணவு உற்பத்தி

## தமிழீழ மக்களே!

### தொடர்ந்தும் நாம் எமது உணவுக்காக கையேந்த முடியுமா? அரசின் உணவு விநியோகம் முற்றாகத் தடைப்பட்டால்...?

சிந்தியுங்கள், செயற்படுங்கள்.

பயிர்ச் செய்கைக்கான பருவ காலம் வருகின்றது.

எம்மிடம்

- நிலம் உண்டு,
- மனித வளம் உண்டு,
- பொருள் வளமும் முற்றாக அழிந்துவிடவில்லை.

எம் மக்களது வயிற்றுப் பசியைப் போக்க காலபோக விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கமாக உழைக்கும் ஆற்றலுடன் தொழில் வாய்ப்பின்றி உள்ளவர்களை விவசாயத்தில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

ஓர் அங்குல நிலத்தைத்தானும் வீணாகாது பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தும் எமது திட்டம் வெற்றி பெற;

நிலமுடையவர்கள் தம்மிடமுள்ள செய்கை பண்ணப்படாத நிலத்தை எமக்கு காலபோகச் செய்கைக்கு தற்காலிகமாக வழங்கியும்,—

பொருள் உதவி செய்ய விரும்புபவர்கள் தம்மால் இயன்ற உதவியை 6 மாதகால கடனுதவியாக பொருளாதார வசதியற்றவர்களுக்கு எமக்கூடாக வழங்கியும் உதவுமாறு வேண்டுகின்றோம்.

உணவு உற்பத்தியில் தன்னிறைவும்,
எமது விடாமுயற்சியில் முன்னேற்றமும்,
மக்களின் பசியைத் தீர்ப்பதில் வெற்றியும் காண —

காலத்தை தவறவிடாது
உற்பத்திப் பெருக்கத்தில்
ஒன்றுபட்டுச் செயற்படுவோம்!



**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,**

83/2, காங்கேசன்துறை வீதி,

கொக்குவில்.

(B-3172)

## நினைவு கூருகின்றோம்...

**1991 - 09 - 24**

1990ஆம் ஆண்டு இத்தேதினத்தில் முல்லைத்தீவில் எதிர்பாராத விதமாக மிதி வெடியில் சிக்கியதில் எமைப்பிரிந்த

நேசன் (நாராயணபிள்ளை தவனேசன் - கந்தளாய்)

யாழ் முத்திரைச்சந்தை, நல்லூர், உடுப்பிட்டி மற்றும் பகுதிகளில் சிறிலங்காப் படையினரின் விமானத் தாக்குதலினால் உயிரிழந்த இரு தமிழர்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

★ 17 08-89 இல் வீரமரணமடைந்த ஆரூரன் (மகேந்திரராசா செந்தில்நாயகம் - கோப்பாய்) என்ற மாவீரரின் விபரம் 17-09-89 இல் வீரமரணமடைந்ததாக இம்மாதம் 17ஆம் திகதியும் மாவீரர் வரிசையில் ரவீந்திரன் என்பவரது பெயர் இம்மாதம் 15ஆம் திகதியும் நினைவு கூருகின்றோம் பகுதியில் தவறுதலாக இடம்பெற்றுவிட்டன.

**- விடுதலைப் புலிகள்**

**மக்கள் முன்னணி**

(B/3169)

சிந்தனைக்கு

செயல் பயனுள்ளதாக இருக்க, தெளிவாக வகுத்து ஏற்கப்பட்ட குறிக்கோள்களை நோக்கிச் செலுத்தப்பட வேண்டும்.

— ஜவாஹர்லால்நேரு

ஈழநாதம்

[illegible], யாழ்ப்பாணம் 24-09-1991
தொலைபேசி
[illegible] [illegible] [illegible]

## தீர்வு நோக்கி எந்தளவு செல்லும்

இலங்கையில் நீடித்து வரும் தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான அடிப்படை யோசனைகள் சிலவற்றை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் பிரேமதாச அமைச்சரவையில் மூத்த உறுப்பினர்களில் ஒருவருமான செள தொண்டமான் முன்வைத்துள்ளார்.

திரு தொண்டமான் முன்வைத்துள்ள அடிப்படை யோசனைகள் எந்தளவிற்கு தமிழர் பிரச்சினையை தீர்ப்பதற்கு உதவும் அல்லது தீர்வு நோக்கி முன்னேற உதவும் என்பதற்கு முன்னர் இந்த யோசனைகள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உடையது என்பதே இந்த ஆலோசனைகளின் பெரும் பலவீனமாகவுள்ளது, இனப் பிரச்சினைத் தீர்விற்கு அழுத்தமானதாக அமையக் கூடியனவா என்ற சந்தேகத்தை எழுப்புகின்றன.

இலங்கையில் இருந்து ஐரோப்பியர் வெளியேறிய பின்னர் ஆட்சிக்கு வந்த பெரும்பான்மை சிங்கள ஆட்சியாளர்களுடன் தமிழ்த் தலைவர்கள் பல நேரடியாகவும், மறைமுகமாகவும் நீண்ட பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்கள். இருபகுதியினரும் பிரச்சினைத் தீர்விற்கான யோசனைகளை முன்வைத்தும் வந்துள்ளார்கள். ஆனால், அவை இறுதி நேரத்தில் கைவிடப்பட்டன. அல்லது ஒப்பந்தங்கள் கைச்சாத்தான பிறகு கிழித்தெறியப்பட்டன.

அதேவேளை மலையகத் தமிழ் மக்களின் 'ஏக பிரதிநிதி' எனத் தன்னைக் கூறிக் கொள்ளும் தொண்டமானும் சிங்கள ஆட்சியாளர்களுக்கு எதிராக நீண்ட கால போராட்டங்களை நடத்திய போதும் அவர் மலையக மக்களின் உயிர் வாழ்வதற்கான அடிப்படை உரிமைகளைத்தானும் பெற்றுக் கொடுக்கவில்லை. 150 வருடங்களுக்கு மேலாக இன்னமும் மலையகத் தமிழ் மக்கள் தோட்ட லயன்களுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றனர். ஆனால் புற அரசியல் சூழலினால் விளைந்த சில நன்மைகளைத் தனது அரசியல் சாதுரியத்தினால் கிடைத்த வெற்றியென பறைசாற்றிக் கொண்டு திரு. தொண்டமான் அமைச்சரவையில் ஒட்டிக் கொண்டுள்ளார்.

இந்தநிலையில் அமைச்சர் தொண்டமான் தமிழர் தேசிய இனப்பிரச்சினை தீர்விற்கு முன்வைத்த யோசனைகளை சிங்களப் பேரினவாதிகள் எந்தளவிற்கு ஆதரிப்பார்கள்; அங்கீகரிப்பார்கள்; இவரால் எந்தளவிற்கு அவர்கள் மீது செல்வாக்குச் செலுத்த முடியும்

## விவாதத்தைத் தடுக்கும் பொருட்டு என் மீது குற்றம் சுமத்தப்படுகிறது

- லலித்

(கொழும்பு)

ஜனாதிபதி மீது கொண்டு வரப்பட்டுள்ள அரசியல் குற்ற விசாரணை பிரேரணை மீது விவாதம் நடைபெறுவதைத் தடுக்கும் பொருட்டு இப்பொழுது என்மீது தனிப்பட்ட முறையில் அபாண்டமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகிறது. இவை தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு நான் தயாராக உள்ளேன் என்று முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி விடுத்துள்ள அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் எனக்கு மறைப்பதற்கு ஒன்றும் இல்லை. எனது சொத்துடமைகள் அவற்றைக் கொள்வனவு செய்த முறைகள், வங்கிக் கடன்கள், தொடர்பாக நான் உரிய அதிகாரிகளுக்கும் ஜனாதிபதிக்கும் ஏற்கனவே பிரகடனம் செய்துள்ளேன்.

நான் அரசியலுக்கு வரும் முன்பு சட்டத்தரணியாக தொழில் புரிந்த காலத்தில் எனக்கு பல சொத்துடைமைகள் இருந்தன. எனது வருமானத்தைச் சகலரும் அறிவர். அதேவேளை எந்தவித வருமானமும் இல்லாதவர்கள் அரண்மனை போன்ற சொத்துக்களைக் கறுவாக்காட்டில் கொள்வனவு செய்துள்ளனர்.

உறுதியான குன்றின் மீது சுயகௌரவம், தன்மானம் ஆகியவற்றைக் கட்டியெழுப்பி உள்ளவர்கள் மீது கண்ணாடிக் கூண்டில் உள்ளவர்கள் கல்லை விட்டெறியக் கூடாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## அலுவலகப் பயணங்களில் சொந்த அலுவல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலிருந்து அலுவலக தேவை என்று கொழும்புசெல்லும் அரச, மற்றும் அரச சார்பற்ற உயர் அதிகாரிகள் சிலர் கொழும்பில் தமது சொந்த அலுவல்களைக் கவனிப்பதிலும், தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதிலுமே அதிக கவனம் செலுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பொதுமக்களுக்கென கொண்டுவரப்படும் தட்டுப்பாடான பொருள்களான மண்ணெண்ணெய் உட்பட சில அத்தியாவசியப் பொருள்கள் அரச ஊழியர்களுக்கிடையே பகிர்ந்துகொள்ளப்படுகின்றன. இதிலும் சில ஊழியர்கள் புறக்கணிக்கப்படுவதாகவும் புகார் தெரிவிக்கப்படுகின்றன. மனிதநல ஸ்தாபனங்கள் கொண்டுவரும் சில பொருள்களையும் சில அதிகாரிகளும், அரச நிறுவனங்களும் தமது சொந்தத் தேவைக்குப் பகிர்ந்தெடுத்துக் கொள்கிறார்களாம்.

கடந்த மாதம் அரசமுறைப் பயணம் ஒன்றைமேற்கொண்டு கொழும்பு சென்று திரும்பிய உயர் அதிகாரி ஒருவர் மிகவும் தட்டுப்பாடு நிலவிய அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றைத் தனது இருப்பிடத்துக்கே கொண்டு வந்துள்ளார். இவற்றைப் பிற மாவட்டங்களிலுள்ளவர்கள் தமது உறவினரிடம் கொடுக்குமாறு தன்னிடம் ஒப்படைத்துள்ளதாக இதுபற்றிக் கேட்டவர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை கடந்த மாதம் பருத்தித்துறை வந்த சரக்குக் கப்பலில் தனியார் ஆங்கில மருந்து [illegible]

சாட்டாகக்கொண்டு சலுகைகளைப் பெற்றுத் தமக்குத் தேவையான பொருள்களைத் தமக்கிடையேபகிர்ந்துகொள்வதாகவும், மேலதிகமான பொருள்களைச் சந்தையில் விற்று லாபம் ஈட்டுவதாகவும் பரவலாகப் பேசிக்கொள்ளப்படுகிறது.

### வியாபாரம் வர்த்தகம்:

## இடரான நாடுகள் வரிசையில் சிறிலங்கா

(கொழும்பு)

சிறிலங்கா வியாபார-வர்த்தக நடவடிக்கைகளுக்கு இடரான நாடுகளின் பட்டியலில் ஏழாவது இடத்தைப் பிடித்துள்ளது. ''போர்ஜின் இன்டர் நாஷனல்'' இதழின் செப்டம்பர் 23-ம் திகதிய இதழில் பயங்கரவாத கொலைகள் நடக்கும் நாடுகளில் முதன்மையான இடத்தையும் பெற்றுள்ளது சிறிலங்கா எனக் கூறப்பட்டுள்ளது அத்துடன் விடுதலைப் புலிகளிடம் தமது கட்டுப்பாட்டையும் இழந்து வருகிறது.

இந்த வரிசையில் பேரு எல்சல்வடோர், இந்தியா, துருக்கி கொலம்பியா, பிலிப்பைன்ஸ், வட அயர்லாந்து, ஸ்பெயின், நிக்கரகுவா ஆகியவையும் இடம் பெற்றுள்ளன.

## ஒருமாதத்திற்குள் ஓய்வூதியம் வழங்கப்பணிப்பு

(கொழும்பு)

அரசாங்கஊழியர்கள் ஓய்வு பெற்று ஒரு மாதத்திற்குள் ஓய்வூதியக்கொடுப்பனவுகளை வழங்குமாறு பணிக்கும் சுற்றறிக்கை ஒன்றை பொது நிர்வாக, மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அனுப்பி வைத்துள்ளார்.

இச் சுற்றறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது ஒருமாத அறிவித்தலுடன் ஓய்வு பெறும் அரச ஊழியர் [illegible]

செய்ய வேண்டும்.

ஓய்வூதியம் பெற தகைமையுள்ள உத்தியோகத்தர் இளைப்பாறி ஒரு மாதம் கடக்க முன் அவரின் ஓய்வூதிய விண்ணப்பத்தை சகல விதத்திலும் பூர்த்தி செய்து ஓய்வூதியப் பணிப்பாளருக்கு அனுப்ப வேண்டும்.

ஓய்வூதியப் பணிப்பாளர் 20 வருட சேவைக் காலத்தைக் கொண்ட அல்லது 55 வயதினைப் பூர்த்திசெய்த அரச ஊழியருக்கு அவர் இளைப்பாறிய [illegible]

## சூரியாவிற்கு மக்கள் அஞ்சலி

(எச்சமோட்டை)

மணலாறு மாவட்டத்தில் சென்ற 20 ஆம் திகதி இடம் பெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை சூரியா (யோககேஸ்வரி அம்பலவாணபிள்ளை- மூதூர்) ஆகிய போராளியின் புகழுடல் சென்றசனிக்கிழமை (21.9.91) பிற்பகல் 4 மணிக்கு கொழும்புத்துறை துறையூர்சந்தியில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் வைக்கப்பட்டது. பெருந் தொகையான மக்கள் தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர். பின் வி.பு.ம முன்னணியினரின் இரங்கல் உரை முடிவடைந்ததும் இராணுவ மரியாதைகளுடன் புகழுடல் ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. (43)

## தங்கக் கடத்தல் பிடிபட்டது

(திருச்சி)

கொழும்பிலிருந்து திருச்சி சென்ற இலங்கைப் பெண் ஒருவரிடம் இருந்து ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான தங்கக் கட்டிகளை திருச்சி விமான நிலைய சுங்க அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

இந்தப் பெண் தங்கக் கட்டிகளை விழுங்கி வந்தது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். பிளாஸ்டிக் பையில் தங்கக் கட்டிகளை வைத்து விழுங்கியிருக்கிறார் என்றும், அவர் முஸ்லிம் பெண் என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சூயஸ்கால்வாயை ஆழமாக்க திட்டம்

(இஸ்மாய்லியா)

சூயஸ்கால்வாயை மேலும் ஆழப்படுத்தி பாரிய எண்ணைக் கப்பல்கள் செல்லும் வகையில் அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

122 ஆண்டு கால இக்கால்வாயை ஆழப்படுத்துவதற்கு நூறுகோடி டொலர் செலவாகும் என்றும் இத்தகைய நடவடிக்கைகளைச் செய்தால் இருபது லட்சம் பீப்பாய் எண்ணெயுடன் செல்லும் கப்பல்கள் இக்கால்வாயை உபயோகிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை மலையகத் தமிழ் மக்களின் 'தனிப் பிரதிநிதி' எனத் தன்னைக் கூறிக் கொள்ளும் தொண்டமானும் சிங்கள ஆட்சியாளர்களுக்கு எதிராக நீண்ட காலப் போராட்டங்களை நடத்திய போதும் அவர் மலையக மக்களின் உயிர் வாழ்வதற்கான அடிப்படை உரிமைகளைத்தானும் பெற்றுக் கொடுக்கவில்லை. 150 வருடங்களுக்கு மேலாக இன்னமும் மலையகத் தமிழ் மக்கள் தோட்ட லயங்களுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றனர். ஆனால் புற அரசியல் சூழலினால் விளைந்த சில நன்மைகளைத் தனது அரசியல் சாதுரியத்தினால் கிடைத்த வெற்றியென பறைசாற்றிக் கொண்டு திரு. தொண்டமான் அமைச்சரவையில் ஒட்டிக் கொண்டுள்ளார்.

இந்நிலையில் அமைச்சர் தொண்டமான் தமிழர் தேசிய இனப்பிரச்சினை தீர்விற்கு முன்வைத்த யோசனைகளை சிங்களப் பேரினவாதிகள் எந்தளவிற்கு ஆதரிப்பார்கள்; அங்கீகரிப்பார்கள்; இவரால் எந்தளவிற்கு அவர்கள் மீது செல்வாக்குச் செலுத்த முடியும் என்பது கேள்விக்குறியே. தாம் செய்த ஒப்பந்தங்களை தாமே கிழித்தெறியும் சிங்கள பேரினவாதிகளை இவரால் கட்டுப்படுத்த முடியுமா? தீர்வை நோக்கி இவரால் முன்னேற முடியுமா?

மேற்குறிப்பிட்ட விவகாரம் ஒருபுறம் இருக்க அர்த்தமுள்ள அதிகாரப் பங்கீட்டின் அடிப்படையிலேயே ஒரு நிரந்தரத் தீர்வை சிந்திக்க முடியும்' எனக் குறிப்பிடும் இ.தொ.கா. தலைவர் தொண்டமானின் கூற்றிற்கு ஏற்ப அவர் வழங்கிய யோசனைகள் அமையவில்லை என்றே தெரிகிறது. திரு. தொண்டமானின் யோசனைகள் முன்னைய மாகாணசபை தீர்வுகள் நின்று கொண்டே சில, கூடிய அதிகாரங்களுக்கு இடமளிக்க செய்யும் யோசனையாகவேயுள்ளது. அத்தோடு சில சொற்பிரயோக மாற்றங்களும் வழி செய்கின்றன.

ஆனால், கடந்த காலத்தில் பேச்சுவார்த்தைகளின் போதும்' வெளிப்படையாகவும் தமிழர் தரப்பு கோரி வந்த தமிழர் தாயகத்தைப் பற்றியோ, அல்லது அதன் சுயநிர்ணய உரிமையைப் பற்றியோ, அல்லது மத்திய மாகாண அரசாங்கங்களுக்கு இடையிலான அதிகாரப் பங்கீடு பற்றியோ அந்த யோசனைகளில் எவையும் தெளிவாக்கப்பட்டிருக்கவில்லை ஆட்சிப்பரப்பை மாகாண அரசாங்கம் எனக் குறிப்பிடும் திரு தொண்டமானின் ஆலோசனைகள் அவற்றின் பரப்பையோ அன்றி எல்லையைக் கூட வரையறுக்கவில்லை. மேலும், மாகாண அரசாங்கத்தின் சட்டமியற்றும், நிறைவேற்றும், நீதி பரிபாலன அதிகாரங்கள் எவை எனவும் குறிப்பிடவில்லை. இதே போன்றே ஏனையவற்றிலும் வரையறைகள் எதுவுமற்ற ஒரு ஆலோசனைகளாகவே அவை உள்ளன.

ஒட்டுமொத்தமாக திரு. தொண்டமானின் ஆலோசனைகள் அர்த்தமுள்ள அதிகாரப் பங்கீட்டினைக் கொண்டுள்ளதாகக் கொள்ள முடியாது அன்றி அர்த்தமுள்ள அதிகாரப் பங்கீட்டைச் செய்யும் நிலைக்கு சிறிலங்கா அரசாங்கத்தைக் கொண்டுவரும் வல்லமை அவருக்கு உண்டு என்றும் உறுதிபடக் கூறிவிடமுடியாது. ஆகையினால், அமைச்சர் தொண்டமானின் யோசனைகள் தமிழரின் இனப்பிரச்சினையைத் தீர்வு நோக்கி எந்தளவிற்கு இட்டுச் செல்லும் என்பது கேள்விக்குரியதே.

கடந்த மாதம் அரசமுறைப் பயணம் ஒன்றை மேற்கொண்டு கொழும்பு சென்று திரும்பிய உயர் அதிகாரி ஒருவர் மிகவும் தட்டுப்பாடு நிலவிய அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றைத் தனது இருப்பிடத்துக்கே கொண்டு வந்துள்ளார். இவற்றைப் பிற மாவட்டங்களிலுள்ளவர்கள் தமது உறவினரிடம் கொடுக்குமாறு தன்னிடம் ஒப்படைத்துள்ளதாக இதுபற்றிக் கேட்டவர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை கடந்த மாதம் மருத்தித்துறை வந்த சரக்குக் கப்பலில் தனியார் ஆங்கில மருந்து வர்த்தகர்களுக்கான மருந்துவகைகள், அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் பாடசாலை மாணவர் உணவு முத்திரைகள் கப்பலில் இடவசதியில்லாததால் கொண்டுவரப்படவில்லை என்று யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மற்றும் சில அதிகாரிகள் தமது உத்தியோக நலன்களை

# ஒருமாதத்திற்குள் ஒய்வூதியம் வழங்கப்பணிப்பு

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்கள் ஓய்வு பெற்ற ஒரு மாதத்திற்குள் ஓய்வூதியக்கொடுப்பனவுகளை வழங்குமாறு பணிக்கும் சுற்றறிக்கை ஒன்றை பொது நிர்வாக, மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அனுப்பி வைத்துள்ளார்.

இச் சுற்றறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது ஒருமாதஅறிவித்தலுடன் ஓய்வு பெறும் அரச ஊழியர் ஒருவரின் சுய விபரக் கோவைகள் ஓய்வு பெற்ற ஒரு மாதத்தில் கொடுப்பனவைப் பெறக் கூடியதாக தயார் செய்யப்படல் வேண்டும்.

அரச சேவையில் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்களினதும், 54 வயதை அடைந்தவர்களினதும், சுய விபரக் கோவைகள் அனைத்தையும் உடனடியாகப் பூர்த்தி செய்ய வேண்டும்.

ஓய்வூதியம் பெற தகைமையுள்ள உத்தியோகத்தர் இளைப்பாறி ஒரு மாதம் கடக்க முன் அவரின் ஓய்வூதிய விண்ணப்பத்தை சகல விதத்திலும் பூர்த்தி செய்து ஓய்வூதியப் பணிப்பாளருக்கு அனுப்ப வேண்டும்.

ஓய்வூதியப் பணிப்பாளர் 20 வருட சேவைக் காலத்தைக் கொண்ட அல்லது 55 வயதினைப் பூர்த்தி செய்த அரச ஊழியருக்கு அவர் இறுதியாகப் பெற்ற சம்பளத்தில் 70 சதவீதத்தை தற்காலிக ஓய்வூதியமாகச் செலுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

நரசிம்மராவ் போட்டியின்றி

# லோக்சபாவிற்கு தெரிவு செய்ய தீவிர முயற்சி

(டில்லி)

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் ஆந்திரப் பிரதேசத்தின் நந்தியால் லோக்சபை தொகுதியில் போட்டியிட தீர்மானித்திருப்பதாகவும், போட்டியின்றித் தெரிவு செய்வதை உறுதி செய்து கொள்ள தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விவகாரம் தொடர்பாக நரசிம்மராவ் சார்பில் பல்வேறு அரசியல் கட்சிகளுடனும் உத்தியோகப்பற்றற்ற பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுவதாகவும்.

ஆந்திரப்பிரதேசத்தில் பிரதான எதிர்க்கட்சியான தெலுங்கு தேசம் பிரதமருக்கு எதிரான வேட்பாளரை நிறுத்தாதிருக்க இணங்கிக் கொண்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

பாரதீய ஜனதாக்கட்சியும் வேட்பாளரை நிறுத்துவதில்லை என்று வாக்களித்திருப்பதாகவும் இதற்கு உதவியாக நந்தியால் தொகுதி காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ஜி பிரதாப் ரெட்டி தனது பதவியை இராஜினாமாச் செய்திருப்பதாகவும்செய்திகள் தெரிவிக்கின்றன.

யூன் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிடாத நரசிம்மராவ் தொடர்ந்தும் பிரதமராக பதவி வகிக்க வேண்டுமானால் பதவியேற்று ஆறு மாதங்களுள் லோக்சபைக்கு தெரிவு செய்யப்பட்டு எம். பி யாக வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு வினையாகியது

(வவுனியா)

தனது பாடசாலை நண்பர்களுடன் சேர்ந்து துப்பாக்கியுடன் விளையாடிக் கொண்டிருந்த பாடசாலை மாணவியொருவர் அத்துப்பாக்கியின் வேட்டிற்குப் பலியாகியுள்ளார். அநுராதபுர பாடசாலையில் கல்வி பயிலும் பி. எம். ரேனுகா ரட்ணாயக்கா (19வயது) என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் வவுனியா மாவட்டத்திலுள்ள நவகம என்ற சிங்களக் குடியேற்றக் கிராமத்தில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது. பிரஸ்தாப மாணவியின் வீட்டிற்கு விருந்தினராக வந்த மாணவர்களிடம் இம்மாணவி ஊர் காவல் படையில் அங்கம் வகிக்கும் தனது சகோதரனின் துப்பாக்கியைக் கொண்டு சென்றார். அவர்களுடன் சேர்ந்து விளையாட்டுத்தனமாக அதை இயக்கிக் கொண்டிருக்கையில் தவறுதலாக அது வெடித்ததால் இவர் உயிரிழந்துள்ளார்.

(இஸ்மாய்லியா)

சூயஸ்கால்வாயை மேலும் ஆழப்படுத்தி வாரிய எண்ணைக் கப்பல்கள் செல்லும் வகையில் அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

122 ஆண்டு கால இக்கால்வாயை ஆழப்படுத்துவதற்கு நூறுகோடி டொலர் செலவாகும் என்றும் இத்தகைய நடவடிக்கைகளைச் செய்தால் இருபது லட்சம் பீப்பாய் எண்ணெய்யுடன் செல்லும் கப்பல்கள் இக்கால்வாயை உபயோகிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# சோவியத்திற்கு 3கோடி டொலர் நிதி உதவி

(நியூயோர்க்)

உலக வங்கி சோவியத் யூனியனுக்கு தொழில்நுட்ப உதவியாக மூன்று கோடி டொலரை வழங்கவிருப்பதாக தெரிவித்துள்ளது. இந்த வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் உடனடி தேவைகளை சமாளிக்கவே இந்த உதவி அளிக்கப்பட்டதாகவும், உலக வங்கியில் சோவியத் யூனியன் ஓர் உறுப்பினராவதற்கான விண்ணப்பம் பரிசீலனையில் உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது.

இராகத்துளி - 9

## போவது முறையோ?

சித்திரை நிலவே! - நீ
சிரித்து எத்தனை நாள்?
நித்தம் மணம் பரப்பும்
புத்தம் புது மலரே!
-எம்மைப்
பித்தராய் ஆக்கிவிட்டு-நீ
போவது முறையோ?

வஞ்சிநாதன்

# விசேட கொடுப்பனவில் பாகுபாடு தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

1988-1989ம் ஆண்டுக்காலப்பகுதிக்கான ஆபத்து சூழ்நிலைச் சேவைக்கென ஊக்குவிப்பாக வழங்கப்படும் விசேடகொடுப்பனவு வழங்குவதில் தமிழ் அரச ஊழியர்கள் மீது அரசு பாகுபாடு காட்டுவது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று எனவும், இப்பாகுபாட்டை நீக்க உடன் நடவடிக்கைமேற்கொள்ளுமாறும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் பொது நிர்வாக அமைச்சரையும், கல்வி அமைச்சரையும் கோரியுள்ளார். இது தொடர்பாக அனுப்பப்பட்டுள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: பொது நிர்வாக அமைச்சரின் சுற்று நிருபங்களுக்கு அமைய ஆயுதப் படையினருக்கும் வடக்கு கிழக்கில் சேவையாற்றிய சிங்கள அரச ஊழியர்களுக்கும் கொடுப்பனவுகளை முழுமையாக வழங்கி விட்டு தற்போது வடக்கு-கிழக்கில் சேவை செய்யும் தமிழ் அரச ஊழியர்களுக்கு லீவு எடுத்த நாட்களுக்கு இக் கொடுப்பனவுகளை வழங்காது விடுவது கவலைக்குரியதுஎனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர்களுக்குபாடசாலை விடுமுறைக் காலம் சட்டரீதியான கடமையென கணிக்கப்பட்ட போதும் இக்கொடுப்பனவுகளை வழங்காது தடை செய்துள்ளமை தமிழ் ஆசிரியர்கள் மீது அரசு காட்டும் பாகுபாடான நடவடிக்கை என பொதுச் செயலாளர் குறிப்பிட்டதோடு பாடசாலை விடுமுறை நாட்களுக்கு முழுமையான கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

அரை நாட்கள் லீவு எடுத்த நாட்களுக்கு அரைநாட்களுக்குரிய கொடுப்பனவுகளை வழங்காது விட்டது முறையில்லை எனவும் ஒரு ஆசிரியர் அரைநாட்கள் வேலைக்குப் போய் வருவதனால் ஏற்படும் ஆபத்து முழுநாள் வேலைக்குப் போய் வருவதனால் ஏற்படும் ஆபத்துக்கு சமமானதனால் முழுமையாக வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இப்பாகுபாடான நடவடிக்கைகளை முற்றாக அகற்றி ஆயுத படையினருக்கும் வடக்கு-கிழக்கு பகுதியில் சேவையாற்றிய சிங்கள அரச ஊழியர்களுக்கும் வழங்கியது போன்று மாதாமாதம் அவ்வூழியர்களுக்கு அரைமாத சம்பளம் என்ற ரீதியில் நடவடிக்கை எடுக்குமாறும் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

## திலீபன் நினைவுக் கவிதைகள்

தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவாக நல்லூரில் நடைபெறவிருக்கும் உண்ணாவிரத நிகழ்வுகளின் போது திலீபன் நினைவுக் கவிதைகள் வாசிக்கப்படவுள்ளன.

இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்டு கவிதைகளை வாசிக்க விரும்புவோர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கோண்டாவில் மாவட்டச் செயலகத்தில் திலீபன்நினைவு நிகழ்வு ஏற்பாட்டுக்குழுவினருடன் இன்று காலை முதல் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டிருக்கின்றது.

---

தியாகி திலீபன் 4ஆம் ஆண்டு நினைவாக
மூன்று நாட்கள்

**உண்ணாநோன்பும் நினைவுக்கூட்டமும்**

காலம்: 24, 25, 26 - 09 - 91
இடம்: நல்லூர்

**24 - 09 - 91**

முதலாம் நாள் நிகழ்ச்சி நிரல்

தீபம் ஏற்றுதல்: திரு. இராசையா அவர்கள்
(தியாகி திலீபனின் தந்தையார்)

தேசியக்கொடி ஏற்றுதல்: திரு. ஐயர் அவர்கள்
(பொறுப்பாளர் தமிழீழ விடுதலைப்புலிகள் வலிகாமம்)

உண்ணா நோன்பு: காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி
பி. ப 4.00 மணிக்கு நிறைவடையும்

நினைவுக் கூட்டம்: 6.00 மணிக்கு ஆரம்பம்

தலைமையுரை: செல்வி மலர்க்கொடி அவர்கள்
(பொறுப்பாளர் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி வலிகாமம்)

நினைவுரைகள்: திரு. அரசண்ணா அவர்கள்
(பொறுப்பாளர் விடுதலைப் புலிகள் மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவு வடமராட்சி)
— செல்வி பாரதி அவர்கள்
(விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி)
— செல்வி மாலினி அவர்கள்
(விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி)
— திரு. தேவர் அவர்கள்
(மூத்த உறுப்பினர் தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம்)

சிறப்புரை: திரு. குரு[illegible] அவர்கள்
(அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திருமலை மாவட்டம்)

கலை நிகழ்ச்சிகள்: தியாக தீபம் - வில்லிசை
(சின்னமணி அவர்கள்)

நாடகம்

எங்கள் தாயகத்தின் சுதந்திரத்துக்காக தனது தேகத்தையே ஒரு போர்க்களமாக்கிய தியாகி திலீபனை நினைவுகூர தமிழீழ [illegible] விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு [illegible] விடுத்துள்ளது.

---

புரட்சிகர இளைஞர் அமைப்பு

# புலிகள் ஆதரவாளர்கள் 6 பேர் தமிழகத்தில் கைது

(சென்னை)

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான புரட்சிகர இளைஞர் அமைப்பைச்சேர்ந்த ஆறுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தமிழகப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

நாகைப்பட்டினத்திற்கருகே உள்ள மணல்மேட்டு கிராமத்தில் நான்கு பேரும், யானைக்காரன் சத்திரத்தில் இரண்டு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தமிழகப்பொலிஸார் தெரிவித்தனர்.

இதேநேரம் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகக் கூட்டம் நடாத்தமுயன்றஇதே அமைப்பைச் சேர்ந்த இருபது பேரை நேற்றுமுன்தினம் தர்மபுரி மாவட்டத்தில் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

---

மணலாற்றில் ... உள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, இப்போரில் காயமடைந்துவரும் பெரும் எண்ணிக்கையிலான இராணுவத்தினர் கொழும்பிற்கும், அனுராதபுர ஆஸ்பத்திரிக்கும் விமான மூலமும், ஹெலிகொப்டர் மூலமும் கொண்டு செல்லப்படுவதாகவும். இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து ஆஸ்பத்திரிகளுக்கு செல்லும் அம்புலன்ஸ் வண்டிகளின் ஓசையும்விடாது ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

---

ஊர்காவற்றுறை ... செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் படுகாயத்துடன் மீட்கப்பட்டவர் வட மாகாணத்திற்கான சிறிலங்கா கடற்படைத்தளபதி எச் ஆர் அமரவீர எனவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

இதுதொடர்பாக நேற்றைய பத்திரிகையில் வெளிவந்த செய்தியில் ஆறு கடற்படையினர் கொல்லப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தமை தெரிந்ததே.

---

இந்திய மீனவர்கள் ... ரிடம் கூறப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி ஐந்து படகுகளில் கடலுக்குச் சென்ற அவர்களை சிறிலங்கா கடற்படையோ, இந்திய கடற்படையோ பிடித்து வைத்திருக்கலாம் என்றும் ஜெயலலிதா கூறினார்.

---

## உண்ணாநோன்பு

(யாழ்ப்பாணம்)

தியாகிதிலீபனின் நான்காம் ஆண்டு நினைவுநாளை ஒட்டி நேற்றைய தினம் யாழ். ஆங்கிலக் கல்வி நிலைய மாணவர்களாலும், பொதுமக்களாலும் உண்ணா நோன்பு அனுஷ்டிக்கப்பட்டது. இதில் வி. பு மக்கள் முன்னணிப் பிரமுகர் திரு பாலகுமார், நிழல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அருண்மாஸ்டர் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். தொடர்ந்து ஆங்கிலக் கல்வி நிலைய மாணவர்களின் கவிதைகள், பேச்சுக்கள், விவாதம், புரட்சிப்பாடல்கள், இசை நிகழ்ச்சி ஆகியன இடம்பெற்றன.

# வவுனி. தியாகி திலீபன் நினைவுச் சிறப்புக் கூட்டம்

வவுனியா மாவட்டத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம்மிகச் சிறப்பாக நடைபெற இருப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மேற்படி தினத்தன்று கனகராயன்குளம் பகுதியிலும், இரணை இலுப்பைக்குளம் பகுதியிலும் நடைபெறவுள்ள பொதுக் கூட்டங்களில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ள இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது (இ)

## பிற்போடப்பட்டது

கொய்யாத்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழகம், அதன் 21ஆவது வருட நிறைவை ஒட்டி நடாத்திய உதைபந்தாட்டப்போட்டியில் நேற்று நடைபெறவிருந்த இறுதியாட்டம் காலவரையின்றிப் பிற்போடப்பட்டுள்ளது.

இப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அரை இறுதிப் போட்டியில் கலைச்சுடர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மோதிய ஜெகிலையின் கழக அணியில் பிறஇடத்து வீரர்கள் பலர் பங்குபற்றினார்கள் என்று கலைச்சுடர் கழகத்தினரால் எழுப்பப்பட்ட எதிர்ப்பை போட்டிக் குழுவினரால் ...

---

முடிவு ... யும், பாதுகாப்பு அதிகாரிகள் பற்றியும்; தவறான அபிப்பிராயத்தை உண்டுபண்ணும் ஆதாரமற்ற வதந்திகளும், தவறான தகவல்களும் பரப்பப்பட்டு வருவதையிட்டு வேதனைப்படுவதாகக் கூறி பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிக்கை வெளியிட்டது.

ஆகாய விமானங்களைத் தாக்கக்கூடிய பதினொரு கணைகள் உட்பட ஏனைய ஆயுதங்கள் முதலியவை எமது படைகளையே தாக்குவதற்காக பாதுகாப்பு அமைச்சினால் விடுதலைப் புலிகளுக்கு அவற்றிற்கு ஏற்றவாறு வளைந்து கொடுக்கும் திறமுறைகளைக் கையாளும் சுதந்திரம் இராணுவத்திற்கு இருப்பது அவசியமாகும்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக முழு ஈடுபாடு கொண்ட நிலையில் பாதுகாப்பு படைகள் போர் தொடுத்து வரும் இன்றைய நிலையில் அவர்களது முயற்சிகளுக்கு பாதகம் விளைவதைத் தடுக்கும் வகையில் உத்தியோகபூர்வமான தகவல்கள் சிலவற்றை மக்கள் முன்வைக்க வேண்டுமென பாதுகாப்பு அமைச்சு கருதுகிறது.

---

கொழும்பில் ... மென்று எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கொழும்பில் இன்று கூடவிருக்கும் பாராளுமன்ற கூட்டம் தொடர்பாக பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் சிறப்பு காவல் படையினர் காவலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும், ஜனாதிபதி பிரேமதாசாவிற்குரிய ஆதரவாளர்களுக்கும் ...

## மாணவரும் கலந்து கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

திலீபனின் ஞாபகார்த்த உண்ணாவிரதம் 24, 25, 26 ஆம் திகதிகளில் ...

## 1500 எழுத்துப்பிழை

கல்விச்சேவை ஆணைக்குழுவின் தொழில் அபிவிருத்திப் பிரிவினால் வெளியிடப்பட்ட 'புதியஆசிரியர்களுக்கு ஆலோசனைகள்' என்ற நூலில் 1500 இற்கும் மேற்பட்ட எழுத்துப் பிழைகள் உள்ளன.

றன.

...தொந்ததே.

ஜெயலலிதா கூறினார்.

**முடிவு**

யும், பாதுகாப்பு அதிகாரிகள் பற்றியும், தவறான அபிப்பிராயத்தை உண்டுபண்ணும் ஆதாரமற்ற வதந்திகளும், தவறான தகவல்களும் பரப்பப்பட்டு வருவதையிட்டு வேதனைப்படுவதாகக் கூறி பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிக்கை வெளியிட்டது.

ஆகாய விமானங்களைத் தாக்கக்கூடிய பதினேழு கணைகள் உட்பட ஏனைய ஆயுதங்கள் முதலியவை எமது படைகளையே தாக்குவதற்காக பாதுகாப்பு அமைச்சினால் விடுதலைப் புலிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்பதே அந்தப் பொய்யான வதந்தியாகும். இது நகைப்பிற்கு இடமானதே.

அந்த அறிக்கையில் மேலும், ஒவ்வொரு நிலைமைகளையும் தனியாக எடுத்து மதிப்பீடு செய்வதன் மூலமே பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டமுடியும். இத்தகைய நிலைமைகள் எப்போதும் மாற்றமடையும் நிலைமைகளைக் கொண்டன. ஆதலால் அத்தகைய சூழ்நிலைகள் ஏற்படும் போதெல்லாம், அவ்வற்றிற்கு ஏற்றவாறு வளைந்து கொடுக்கும் திறமுறைகளைக் கையாளும் சுதந்திரம் இராணுவத்திற்கு இருப்பது அவசியமாகும்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக முழு ஈடுபாடு கொண்ட நிலையில் பாதுகாப்பு படைகள் போர் தொடுத்து வரும் இன்றைய நிலையில் அவர்களது முயற்சிகளுக்கு பாதகம் விளைவதைத் தடுக்கும் வகையில் உத்தியோகபூர்வமான தகவல்கள் சிலவற்றை மக்கள் முன்வைக்க வேண்டுமென பாதுகாப்பு அமைச்சு கருதுகிறது.

யுத்தம் இடம்பெறும் ஒரு காலகட்டத்தில், முக்கியமானதும் அட்டவணைப்படுத்தமுடியாததுமான தகவல்களை அம்பலப்படுத்துவது பாதுகாப்பு அதிகாரிகளின் வழக்கமல்ல. எவ்வாறாயினும் இதுகாறும் பயன்படுத்திய போர்த்திறன்களும், உபாயங்களும் உண்மையில் நாட்டினையும், பொதுமக்களையும் பாதுகாக்கும் நோக்கில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கொழும்பில்**

மென்று எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கொழும்பில் இன்று கூடவிருக்கும் பாராளுமன்ற கூட்டம் தொடர்பாக பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் சிறப்பு காவல் படையினர் காவலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும், ஜனாதிபதி பிரேமதாசாவிற்குரிய ஆதரவாளர்களுக்கும் அதிருப்தியாளர்களின் ஆதரவாளர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டு விடாமல் தடுப்பதற்கு இந்தச் சிறப்புப் படையினர் கொழும்பில் நிறுத்தப்பட்டுள்ளனர் என்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மாகாண நகரங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பாக கண்டி, காலி போன்ற இடங்களில் பாதுகாப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

வாகப் பொறுப்பாளர் திரு. அருண்மாஸ்டர் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். தொடர்ந்து ஆங்கிலக் கல்வி நிலைய மாணவர்களின் கவிதைகள், பேச்சுக்கள், விவாதம், புரட்சிப் பாடல்கள், இசை நிகழ்ச்சி ஆகியன இடம்பெற்றன.

## மாணவரும் கலந்து கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

திலீபனின் ஞாபகார்த்த உண்ணாவிரதம் 24, 25, 26 ஆம் திகதிகளில் தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தினரால் நல்லூரில் மேற்கொள்ளப்படவுள்ளது. அனைத்து தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களும், மாணவரும் உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தகாவிற்கு**

லங்காவின் பிரதமராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கூட்டத்தொடருக்கு அழைக்கப்பட்ட சமயப்பெரியார்கள், உயர்நீதிமன்றநீதியரசர், அமைச்சு செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் போன்ற முக்கிய பிரமுகர்கள் மட்டுமே பாராளுமன்றக் கலரியில் அனுமதிக்கப்படுவார்கள் எனத் தெரியவருகிறது.

**பெரும்பான்மை**

ந்து செல்லும் குழுவினர் நினைப்பதுபோல் யூ. என். பி. யில் உள்ளோர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் சேர்ந்தால் அநுரா பண்டாரநாயக்காவை பிரதமராக்க எனக்கு முழு அதிகாரமும் இருக்கிறது எனத் தெரிவிதனார்.

எனக்குக் கீழ் பிரதம மந்திரியாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இருக்க விருப்பமில்லை எனத் தெரிவித்துள்ளார். ஆகவே விருப்பமுள்ள, ஆர்வமுள்ள பிரதமராக வர கடும் முயற்சி மேற்கொள்ளும் அநுராவை பிரதமராக்குவேன் எனபிரேமதாசா தெரிவித்துள்ளார்.

இருப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மேற்படி தினத்தன்று கனகராயன்குளம் பகுதியிலும், இரணை இலுப்பைக்குளம் பகுதியிலும் நடைபெறவுள்ள பொதுக் கூட்டங்களில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள்

## 1500 எழுத்துப்பிழை

கல்விச்சேவை ஆணைக்குழுவின் தொழில் அபிவிருத்திப் பிரிவினால் வெளியிடப்பட்ட 'புதியஆசிரியர்களுக்கு ஆலோசனைகள்' என்ற நூலில் 1500 இற்கும் மேற்பட்ட எழுத்துப் பிழைகள் உள்ளன.

28 பக்கங்களில் மட்டும் இந்தத் தொகை எழுத்துப் பிழைகள் இருப்பது தமிழ் மொழியை கொலை செய்யும் நடவடிக்கையென தமிழர் ஆசிரியர்சங்க பொதுச் செயலாளர் கண்டனம் தெரிவித்து கல்விச் சேவைகள் ஆணைக் குழுத் தலைவருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

**பெரும்பான்மையை**

பிரேமதாசாவா அல்லது எதிர்க்கட்சிகள், அதிருப்தியாளர் கூட்டுப் பெறப்போகின்றதா என்பதைக் காலியாக உள்ள வடபகுதிசுயேட்சைக்குழுவினரின் ஒன்பது இடங்களை நிரப்புவதன் மூலம் பிரபாகரன் முடிவு எடுக்கமுடியும் என்று அவ்விதழில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது

1989 தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட யாழ் மாவட்ட எட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்களும், ஒரு தேசிய பட்டியல் உறுப்பினரும் பதவி விலகியமை தெரிந்ததே.


இவ்வெற்றிடங்களை நிரப்புவதன் மூலம் இரண்டில் ஒரு பிரிவினரின் குறைந்தபட்ச பெரும்பான்மையைத் தீர்மானிக்க முடியும் என்று மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

...இய விளையாட்டுக் கழகம், அதன் 21ஆவது வருட நிறைவை ஒட்டி நடாத்திய உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று நடைபெறவிருந்த இறுதியாட்டம் கால்வரையின்றிப் பிற்போடப்பட்டுள்ளது.

இப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அரை இறுதிப் போட்டியில் கலைச்சுடர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மோதிய ஜெநிலையின் கழக அணியில் பிறஇடத்து வீரர்கள் பலர் பங்குபற்றினார்கள் என்று கலைச்சுடர் கழகத்தினரால் எழுப்பப்பட்ட, எதிர்ப்பை போட்டிக் குழுவினரால் சுமுகமாக தீர்த்து வைக்க இயலாது போகவே இப்பொழுது பிரச்சினை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த உதைபந்தாட்டப் போட்டியில் உள்ளூர் கழகங்கள் மாத்திரம் கலந்து கொண்டன என்பது குறிப்பிடத்தக்க தொன்றாகும்.


## நான்காம் ஆண்டு நினைவாக



தலைவனின் வழி காட்டலில் தமிழ் பேசும்
மக்களின் விடுதலைப் போராட்டத்தை
தரணிக்கு எடுத்தியம்பும் வகையில்
தன்னையே அர்ப்பணித்த
தியாகியாம் திலீபனுக்கு
எமது இதய அஞ்சலிகள்

நிர்வாகி:

ஆசிரியர்கள், மாணவர்கள்

யுனிக்கோ கணனி கல்வி நிலையம்,

37, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(B/3177)



## சுன்னாகம் மேற்கு ஐயன்னா சனசமூக நிலையம்

மேற்படி எமது கழகத்தில் நடைபெற்ற விழாவில் தியாகி திலீபனின் நினைவு கூரப்பட்டு பல முக்கியஸ்தர்கள் உரை நிகழ்த்திய பின் எமது கழகத்திற்கு அன்பளிப்புச் செய்தவர்களின் அதிர்ஷ்டம் குலுக்கப்பட்டது. இதன் சீட்டு இலக்கங்கள் பின்வருமாறு:

I இல 1431, II இல. 1221

மேற்படி சீட்டிலக்கங்களைக் காட்டிப் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளவும்.

- செயலாளர்

(R- 1717)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.